1995 ஏப்ரல் 18]

(அ) மற்றும் (ஆ) : தேவைக்கேற்ப மையம் தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

அனுமதி மறுத்த பிரச்சினையைக் குறித்து (ஆளுநர் பயணத்தின்போது நடந்ததாகக் கூறப்படும் சம்பவம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சேலம் மாவட்டம் ...(குறுக்கீடு) இன்னொரு பிரச்சினையை எடுக்க இருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: இந்தப் பிரச்சினையை எடுத்து விட்டு அடுத்ததை எடுத்துக் கொள்ளலாம். நான் வேண்டாம் என்று சொல்லவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்ததை நான் மறுத்து உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களை நேரிலே சந்தித்தபோது அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். பல வகையிலே செய்திகள் வந்திருக்கின்றன. அனைத்து பத்திரிகைகளிலேயும் இந்தச் செய்தி வந்திருக்கிறது. மாநில ஆட்சித் தலைவருக்கே இந்தக் கதி என்று சொன்னால்... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்த பிரச்சினையை அப்படியே எழுப்ப முடியாது. ஒரு பிரச்சினையை நீங்கள் கொடுத்து அந்தப் பிரச்சினையினுடைய தன்மையையே மறுக்கிற நிலைமை இருக்கிறது.

[1995 ஏப்ரல் 18

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: இந்த அவையிலே விவாதிப்போம். அவைக்குத் தெரிய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை மறுக்கிறபோது, அந்த விவாதம் கவர்னரை விவாதப் பொருளாக ஆக்கக்கூடும்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: கவர்னரை விவாதப் பொருள் ஆக்கவில்லை. அந்த அளவுக்கு சட்டம் ஒழுங்கு கெட்டு இருக்கிறது. இந்த நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற பிரச்சினையை எழுப்பும்போது கவர்னர் அல்ல விவாதப்பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, என்னைப் பொறுத்த மட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஆட்சியாளர்களும் இந்தப் பிரச்சினைக்குப் பதில் சொல்லத் தயார் என்று என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் கவர்னரை விவாதப் பொருள் ஆக்க முடியுமா என்பதை முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் கவர்னரை விவாதப் பொருளாக்கக் கூடிய ஒரு பிரச்சினையை இங்கே நான் அனுமதிக்க முடியாது என்பதுதான். கவர்னரை விவாதப் பொருள் ஆக்கலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புக்கொண்டால் நான் எடுக்கத் தயார்.

முற்பகல் 11–30

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: தலைவர் அவர்களே, கவர்னரை விவாதப் பொருள் ஆக்கக்கூடாது என்பது நம்முடைய விதிகளில் மட்டும் அல்ல; அரசியல் சட்டத்திலேகூட இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவர்னரை விவாதப் பொருள் ஆக்கலாமா? (குறுக்கீடு) நீங்கள் சொல்கிறீர்கள். அவ்வாறு நடக்கவில்லை; நடந்த சம்பவத்தை அவர்கள் சொல்கிறபோது விவாதப் பொருள் ஆகும். (குறுக்கீடு) உண்மையிலேயே அந்தப் பிரச்சினையை இங்கே விவாதப் பொருள் ஆக்கலாம் என்று நீங்கள் ஏற்றுக்கொண்டால் நாளைக்கு நான் அனுமதிக்கத் தயார். (குறுக்கீடு) பதிலுரையின்போது வரத்தான் செய்யும். நீங்கள் பேசப் போகிறீர்கள். நீங்கள் பேசுகின்றபோது அந்தப் பிரச்சினைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில்

1995 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

சொல்லித்தான் தீரவேண்டும். பதில் சொல்கிறபோது விவாதப் பொருளானால் 'காஸ் ஆஃப் ஆக்ஷன்' நீங்கள் எழுப்பினதுதான் வரும். அது இருக்கலாம் என்று நீங்கள் ஒப்புக்கொண்டால் நாளைக்கு நான் அனுமதிக்கத் தயார். (குறுக்கீடுகள்)

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆளுநரை இந்த அவையிலே விவாதப் பொருள் ஆக்க முடியும் என்று சொல்லவில்லை. விவாதப் பொருள் ஆக்கக்கூடாது என்று அரசியல் சட்டம் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறது. என்வே, ஆளுநரையோ ஆளுநருடைய நடவடிக்கைகளைப் பற்றியோ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய விதிகளிலே இருக்கிறது. அரசியல் சட்டத்தில் எங்கும் இல்லை. நம்முடைய விதிகளிலே வைத்திருக்கிறோம். விதிகளில் விலக்குக்கொடுத்து எடுத்துக் கொள்ளலாம் என்று நீங்கள் எல்லாம் சொன்னால் நானும் தயார். (குறுக்கீடு) இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தான் தயார் என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவையில் தெரிவிக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை எடுக்கக்கூடாது என்கிற நிலைமை இல்லை; எடுங்கள்; நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் எந்த ஒளிவு மறைவும் இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதைப் போல இந்த மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு கெட்டுப்போகவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம்-ஒழுங்கு மிகவும் நன்றாகத்தான் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவர் எழுப்ப விரும்புகின்ற பிரச்சினைக்கு நான் பதில் சொல்லும்போது ஆளுநரைப் பற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஆகவே, பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால் பதில் சொல்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால் இந்த விவகாரத்தைப் பற்றி ஏற்கெனவே இந்த நாட்டின் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும் நானே கடிதம் எழுதியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் முழு விவரங்களையும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆக, அதே விவரங்களை இந்த அவையில் வெளியிடுவதற்கு எனக்கு என்ன தயக்கம்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இதை எப்போது

வேண்டுமானாலும் - நாளை எடுத்துக்கொள்ளலாம், அதற்கு பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன இருக்கிறது? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற சம்பவம் பாதுகாப்பற்ற தன்மையைக் காட்டுகிறது. அந்த அளவுக்கு ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதத்திற்குள்ளே போவதைச் சொல்லவில்லை. நான் கேட்பது இதேதான். அது ஆளுநரை விவாதப் பொருள் ஆக்கும். (குறுக்கீடு) இல்லை. இல்லை. ஆக்காமல் எப்படி? நீங்கள் கிளப்பினால் ஆகித்தான் தீரும். இதை நான் அனுமதித்தால் ஆளுநரை விவாதப் பொருள் ஆக்கவேண்டித்தான் இருக்கும். அந்த விதிக்கு நான் விலக்கு அளித்துத்தான் இந்த விவாதத்தை அனுமதிக்க வேண்டி வரும். (குறுக்கீடு) இல்லை. ஆளுநரை விவாதப் பொருள் ஆக்க முடியாது என்கிற அந்த விதிக்கு நான் விலக்கு அளித்துதான் அனுமதிக்க வேண்டி வரும்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: ஆளுநரை விவாதப் பொருள் ஆக்காமல் சம்பவத்தை பற்றி மட்டும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இல்லை. இதற்கு விவாதம் வந்துதான் தீரும். இந்த விவாதத்தை அனுமதித்தால்-பேரவைத் தலைவரைப் பொறுத்தமட்டில் ஆளுநரை விவாதப் பொருள் ஆக்கக் கூடாது என்கிற விதிக்கு விதிவிலக்கு அளித்துத்தான் இதை அனுமதிக்க வேண்டிவரும். எதிர்க்கட்சித் தலைவரும் தன்னுடைய சம்மதத்தைச் சொன்னால் நாளைக்கு நான் எடுத்துக்கொள்ளத் தயார்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: ஆளுநரை விவாதப் பொருள் ஆக்காமல்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆக்காமல் எப்படி இருக்க முடியும்? (குறுக்கீடு) ஆளுநரைத்தான் நீங்கள் பேசுகிறீர்கள். ஆகவேதான் உங்களுக்கு நான் அனுமதி மறுத்து இருக்கிற அந்தக் கடிதத்திலேயே எழுதியிருக்கிறேன். இது விவாதப் பொருள் ஆக்கும் என்கிற காரணத்தினாலேதான் நான் அனுமதி மறுத்திருக்கிறேன்.

1995 ஏப்ரல் 18]

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னதை மட்டும் நான் படிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நீங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை இந்த விவகாரம் குறித்து மேலும் பேச அனுமதித்தால் அதற்கு நானும் பதில் சொல்லியாக வேண்டும். இதற்கு எனக்கு இந்த மாநில காவல்துறை இயக்குநர், டி.ஜி.பி. அவர்கள் அனுப்பிய ரிப்போர்ட் தேவை. நான் ஜனாதிபதி அவர்களுக்கும், பிரதமர் அவர்களுக்கும் அனுப்பிய கடிதங்கள் எனக்குத் தேவை. அந்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. ஆகவே, அந்த விவரங்களை வைத்துக் கொண்டுதான் நான் இந்த அவையில் பதில் சொல்ல முடியும். ஆகவே இந்தப் பிரச்சினையை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கோருகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

முற்பகல் *11-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல நான் ஏற்கெனவே இதற்கு அனுமதி மறுத்து இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் வற்புறுத்துகிற காரணத்தால் இதை விவாதப் பொருள் ஆக்குவதற்கு அவரும் ஒப்புதல் அளித்தார் என்கிற முறையில் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு இந்த விவாதத்தை எடுத்துக்கொள்ளலாம் என்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக்கொள்வதற்கு ஏன் தயங்குகிறார் என்பது நன்றாகவே புரிகிறது. அவருக்கு தினமும் வெளிநடப்பு செய்வதற்கு ஏதாவது ஒரு காரணம் தேவை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதற்காகத்தான் இன்றே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் உங்களுடைய பதிலிலே தாக்குதல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்னும் நிலையாலும்...*(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குக் கிடைத்தத் தகவலை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். (குறுக்கீடுகள்) நான் எழுதியிருப்பதைப் பற்றிக் கேட்கவேண்டும் என்றால் நீங்கள் என்னுடைய அறையிலே வந்துதான் கேட்கவேண்டும். ஆகவே, நான் உங்களுக்கு அனுமதி மறுத்து இருந்தாலும் நீங்கள் கேட்கிறீர்கள் (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதற்குப் பதில் சொல்வதற்கு நான் தயார் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆணித்தரமாகக் கூறுகிறேன். தாக்குதல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் முழு விவரங்களை வெளியிட எனக்கு அவகாசம் தேவை. ஏன் என்றால் அந்த ரிப்போர்ட்டுகள் என்னிடத்தில் தற்போது இல்லை. அதனால்தான் நாளைக்கு பதில் சொல்லுகிறேன். இவர்களுடைய தவறான, அவதூறு பிரச்சாரத்தை முறியடிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆகவே அது நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்) நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இன்றைக்கு எடுத்துக்கொள்கிற பிரச்சினைக்கு மட்டும் போகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, மேற்கொண்டு விவாதம் இதில் வைத்துக்கொண்டு இருக்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்லிவிட்டேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என் மீது குற்றச்சாட்டு சொல்லுகிறார்; நான் பதில் சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, குற்றச்சாட்டு இதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் கிளப்பினீர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள் இது நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்) சேலம் மாவட்டம் கருமாந்துறை காவல் நிலையத்தில் 15–4–1995–ஆம் தேதி காவலர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளது குறித்த பிரச்சினையை பேரவையில் எழுப்ப.. (குறுக்கீடுகள்)

(திரு. இரா. அப்பு நடேசன், திரு. கே.கே. சின்னப்பன், திரு. கே. செல்வராஜ், திரு. சஞ்சய் ராமசாமி, திரு. வே. கண்ணன்,

1995 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

திரு. ஆர். சிங்காரம், திருமதி ஜீனத் சர்புதீன் ஆகியோரைத் தவிர மற்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையைவிட்டு வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பினார். எழுப்புவதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன் என்பதைச் சொன்னதற்குப் பிறகும் பேச அனுமதித்து இருக்கவே கூடாது, இருந்தாலும் என்னை அனுமதிக்கவே இல்லை என்று சொல்லும் காரணத்திற்காக அனுமதியும் கொடுத்தேன். இந்தப் பிரச்சினையில் இருக்கக்கூடிய சிக்கலையும் நான் பேரவைக்குத் தெரிவிக்கவேண்டும். பதிலுரை என்று வருகிறபோது அல்லது விவாதத்தின் போதேகூட சிலர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்கிற முறையில் எழுப்புவார்கள். அப்போது அது விவாதப் பொருள் ஆகும். விவாதப் பொருள் ஆகக்கூடாது என்று விதி இருக்கிறது. அதற்கு பேரவையினர் அனைவரும் ஒத்துக்கொண்டால் நான் அதற்கு விதிவிலக்குக் கொடுத்துவிடக்கூடத் தயார். ஏன் என்று சொன்னால் எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும் என்று சொல்லுகிறார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தான் பதில் சொல்லுவதற்குத் தயார் என்பதைத் தெரிவித்து விட்டார்கள். ஆக அந்த ஒரு பிரச்சினை நமக்கு தடங்கலாக இருப்பதற்கு நான் விதி விலக்குக் கொடுத்து விடத் தயார். ஆனால் இன்று நான் மறுத்த பிரச்சினையை இன்றைக்கே பழையபடி எடுக்க முடியாது. நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று தெரிவித்ததற்குப் பிறகும் திட்டமிட்டுதான் வெளிநடப்புச் செய்யவேண்டும் அல்லது இங்கே ஒரு அசம்பாவித, அசாதாரண சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்கிற தங்களுடைய திட்டத்தை நிறைவேற்றுவதிலேதான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு குறியாக இருந்தார்கள் என்பதைக் கண்கூடாக இன்றைக்கு பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் விவாதப் பொருள் ஆக்குவதற்கு ஒத்துக்கொண்டார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் இதை நான் பேசித்தான் ஆக வேண்டும் என்று சொன்னால் அது விவாதப் பொருள் ஆகித்தான் தீரும். நான் அதைத்தான் கேட்டேன். நீங்கள் எழுப்பித்தான் தீரவேண்டும் எனறு சொன்னால் அது விவாதப் பொருள் ஆகித்தான் தீரும். அதற்கு நான் விதி விலக்கு அளித்துத்தான் தீரவேண்டும்.

[1995 ஏப்ரல் 18

திரு.ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர், ஒத்துக் கொண்டாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் ஒத்துக்கொள்கிறார்: அவர் எழுப்ப வேண்டுமென்று சொல்கிறாரே; அவர் இன்றைக்கே எழுப்ப வேண்டுமென்று சொல்கிறாரே; அவர் இன்றைக்கு எழுப்பவேண்டுமென்று சொல்லுகிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயார் என்று சொல்லுகிறபோது நாளைக்கு நான் அனுமதித்துத்தான் தீரவேண்டும்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

காவலர் ஒருவர் சேலம் கருமாந்துறை காவல் நிலையத்தில் இறந்து கிடந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சேலம் மாவட்டம் கருமாந்துறை காவல் நிலையம் பிரச்சினையைப்பற்றி அறிவிப்புக் கொடுத்துள்ள உறுப்பினர்களில் திரு. கந்தசாமி, அந்தப் பகுதியைச் சேர்ந்தவர், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் இருக்கையில் இல்லை; பேரவை விதி 55-ன்கீழ் கொடுத்த உறுப்பினர் திரு. எச் எம். ராஜு இருக்கையில் இல்லை. திரு இரா. தாமரைக்கனி எழுப்ப விரும்புகிறீர்களா?

திரு. இரா. தாமரைக்கனி : எழுப்பவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் அல்ல. நீங்கள் எழுப்பவில்லை என்றால் விட்டுவிடலாம்.

முற்பகல் 11.40

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-4-95ஆம் தேதி சேலம் பகுதியிலுள்ள மலைப்பகுதியில் (குறுக்கீடு) சேலம் பகுதியில் உள்ள மலைப் பகுதியில் உள்ள ஒரு காவல் நிலையத்தில் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அறிவிப்பை நீங்கள் எழுப்ப விரும்புகிறீர்களா என்று கேட்டேன்.

திரு. இரா. தாமரைக்கனி: ஆமாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மலைப்பகுதி அருகே 15-4-95ஆம் தேதி மலைப்பகுதியில் உள்ள காவல் நிலையத்தில் காவல் துறை அதிகாரிகள் ஒரு சாராய வியாபாரி தண்டாயுதபாணி என்பவரைக் கைது பண்ணி